2022 மே 4]

கிளை–2–ல் தொழில்நுட்பப் பிரிவும், பொது மேலாளர் அலுவலகமும் செயல்பட்டு வருகின்றன. இதரப் பிரிவுகள், அலுவலகம் இல்லாத காரணத்தினால் அலுவல் பணிகளுக்கு ஈரோடு மற்றும் கோவைக்குச் செல்ல வேண்டிய நிலையுள்ளது. எனவே, திருப்பூர் மண்டலத்திற்கென தனி அலுவலகம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று, அங்கே தேவை இருக்கிறது. ஆனால், நிதி நெருக்கடிச் சூழலில் புதிய அலுவலகம் கட்டுவதற்கான வாய்ப்பு தற்போது இல்லை. இருப்பினும், நிதி நெருக்கடிச் சூழல் சரியான பிறகு எதிர்காலத்தில் அதுகுறித்துப் பரிசீலிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 218, மாண்புமிகு உறுப்பினர் திரு. J.L. ஈஸ்வரப்பன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

218—

பால் குளிரூட்டும் நிலையம்

***5420—திரு. J.L. ஈஸ்வரப்பன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆற்காடு தொகுதி, குண்டலேரி ஊராட்சியில் உள்ள மருதமங்கலம் மற்றும் துர்கம் ஊராட்சியில் உள்ள முகமதுபேட்டை ஆகிய பகுதிகளில் பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஆற்காடு தொகுதி, குண்டலேரி ஊராட்சியில் உள்ள மருதமங்கலம் கிராமம் மற்றும் துர்கம் ஊராட்சியில் உள்ள

முகமதுபேட்டை ஆகிய கிராமங்களில் தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. J.L. ஈஸ்வரப்பன் அவர்கள்.

திரு. J.L. ஈஸ்வரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பால் கொள்முதல் செய்வதற்குண்டான வழிவகைகள் குறைவாக இருப்பதால்தான் அவ்வாறு சொல்லியிருக்கிறார்கள். அதிலே கணியனூர், குண்டலேரி, கீழ்ப்பாடி, பழையனூர், மருதம் ஆகிய ஊராட்சிகளில் கடந்த காலங்களில் செயலற்றுப்போன பால் கூட்டுறவுச் சங்கங்களைப் புதுப்பித்துக் கொடுத்தால், கண்டிப்பாக அந்த இடத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்குத் தேவையான, பால் கொள்முதல் செய்வதற்கான வழிவகைகள் ஏற்படும். மேலும், இருங்கூர், பெண்ணகர், குப்பிடிசாத்தம், பாரியமங்கலம், கோடாரி, சிட்டதாங்கல், செங்கனாவரம் ஆகிய பகுதிகளில் கொள்முதல் செய்யப்படும் பாலை சேமிக்க வேம்பி ஊராட்சியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கவும், மேலும், கணியம்பாடி, நெல்வாய், சாத்துமதுரை, மூஞ்சூர்பட்டு, துத்திப்பட்டு, வேப்பம்பட்டு ஆகிய ஊராட்சிகளில் புதிதாகப் பால் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து, கணியம்பாடி ஊராட்சியில் புதிதாக பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கவும், மேலும், மாங்காடு, சர்வந்தாங்கல், புண்ணபாடி, அத்திதாங்கல், லாடவரம் மற்றும் கரிமேடு ஆகிய பகுதிகளில் கொள்முதல் செய்யப்படும் பாலை சேமிக்க சர்வந்தாங்கல் பகுதியில் புதியதாக பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு தொகுதியில்

மொத்தம் 36 தொடக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் நாளொன்றுக்கு 18,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு, தாமரைப்பாக்கம் (5,500 லிட்டர்), காவனூர் (5,000 லிட்டர்), பரதராமி (5,500 லிட்டர்), போகனூர்எச் (2,000 லிட்டர்) ஆகிய தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையங்கள்மூலம் குளிரூட்டப்பட்டு, வேலூர் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியப் பால் பண்ணை மற்றும் சென்னைப் பெருநகரப் பால் பண்ணைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. தற்போது ஆற்காடு தொகுதியில் குண்டலேரி ஊராட்சியில் உள்ள மருதமங்கலம் கிராமத்தில் நாளொன்றுக்கு சராசரி 150 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. மருதமங்கலம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான கட்டடமோ, இடவசதியோ இல்லாததாலும், மருதமங்கலம் கிராமத்தில் பால் கொள்முதல் குறைவாக உள்ளதாலும், புதியதாக ஒரு தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், ராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு தொகுதியில் துர்கம் ஊராட்சியில் உள்ள முகமதுபேட்டை பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் நாளொன்றுக்கு சராசரியாக 600 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு, 10 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள காவனூர் தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. காவனூர் தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையத்தைச்சுற்றி 12 கிலோ மீட்டர் சுற்றளவில் உள்ள முகமதுபேட்டை தொடக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்த்து மொத்தம் 13 கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து நாளொன்றுக்கு சராசரியாக 5,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு காவனூர் தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையத்தில் குளிரூட்டப்பட்டு, வேலூர் பால் பண்ணைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. முகமதுபேட்டை தொடக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான கட்டடமோ, இடவசதியோ இல்லை. எனவே, புதியதாக ஒரு தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. J.L. ஈஸ்வரப்பன் அவர்கள்.*

[2022 மே 4

முற்பகல் 10—35

திரு. J.L. ஈஸ்வரப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பதிலைச் சொல்வார்கள் என்று முதலில் சொன்னபோதே சொன்னேன். அந்த இடத்தில் பால் கொள்முதல் குறைவாகத்தான் கிடைக்கும். மேற்குறிப்பிட்ட கணியனூர், குண்டலேரி, கீழ்ப்பாடி பகுதிகளில் புதியதாகப் பால் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தால் கண்டிப்பாக அதிகமாக பால் கிடைக்கும். மேலும், பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தக் கட்டடமோ இடவசதியோ இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களே பதில் சொல்லியிருக்கிறார். கலவை பேரூராட்சி, செய்யாத்து உண்ணம், நம்பரை, விலாரி, சீயாம்பாடி பகுதிகளில் புதிதாக கட்டடம் கட்டிக் கொடுத்தால் நன்றாக இருக்கும். இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீதுள்ள நம்பிக்கையில் அரசாங்கம் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தச் சமயத்தில் ஆவின் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கு, மாட்டுத் தீவனத்திற்கு மானியம் வழங்கினால், விவசாயிகளிடம் அரசாங்கம் கொள்முதல் செய்யும்போது ஆவின் நிறுவனத்திற்கு பால் அதிகமாகக் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது, . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. J.L. ஈஸ்வரப்பன்: *அதனால் மாட்டுத் தீவனத்திற்கு மானியம் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொன்னதுபோல, மருதமங்கலம் கிராமத்திலுள்ள கூட்டுறவுச் சங்கத்தில் 150 லிட்டர் பால்தான் கொள்முதல் செய்யப்படுகிறது என்ற காரணத்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பால் உற்பத்தியை இன்னும் அதிகப்படுத்தி, அந்தச் சங்கத்தின் உறுப்பினர் எண்ணிக்கையை அதிகப்படுத்தி, செயலிழந்திருக்கிற பால் கூட்டுறவுச் சங்கங்களையும் புதுப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பால் கொள்முதல் ஏறக்குறைய 5,000 லிட்டர் என்று கொண்டுவரும்பட்சத்தில்*

2022 மே 4]

அங்கு பால் குளிரூட்டும் நிலையத்தை (BMC) உருவாக்கித் தர அரசு தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 219, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். சரவணக்குமார், மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

219—

சுற்றுச்சுவர்

***4377—திரு. கே.எஸ். சரவணக்குமார்:**

மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் தொகுதி, கீழவடகரை ஊராட்சி, அழகர்சாமிபுரத்தில் உள்ள ஈத்கா எனும் பெருந்திடலுக்கு சுற்றுச்சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் மேற்பார்வையில் உள்ள மசூதிகள், மதரஸாக்கள் மற்றும் தர்காக்கள் ஆகியவற்றைப் பழுதுபார்ப்பதற்கு மற்றும் புனரமைப்பதற்குத் தமிழ்நாடு அரசால் 1999 ஆம் ஆண்டு முதல் பெருமராமத்து மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், கீழவடகரை அழகர்சாமிபுரத்தில் பெருநாள் தொழுகை அன்று அனைத்து பள்ளிவாசல்களும் சேர்ந்து தொழும் ஈத்கா எனும் பெருந்திடலுக்குச் சுற்றுச்சுவர் கட்ட பள்ளிவாசலின் நிருவாகம் தமிழ்நாடு வக்ஃப் வாரிய நிருவாகத்தின்மூலம் விண்ணப்பித்தால் அரசு வழங்கும் மராமத்து மானியம் பெற வழிவகை உண்டு என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.